# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

அன்புள்ள தோழர்களே, வணக்கம்

தமிழக மின்வாரியத்தல் 1000 கணக்கீட்டாளர் 2ம் நலை பணிக்கு வேலைத்தேடி தரும் அலுவலகம் மூலம் பணிநியமனம் செய்வதற்குண்டான நேர்காணல் 25.11.2013 முதல் தொடங்கி உள்ளது. அந்த ஊழியர்கள் மத்தியில் மின்ஊழியர் மத்திய அமைப்பை அறிமுகப்படுத்தும் வகையில் ஒரு துண்டு பிரசுர நகலை கீழே பிரசுரித்துள்ளோம். துண்டு பிரசுரத்தின் நகல் காலதாமதமாக அனுப்பபட்டாலும் இதன் அவசியத்தையும், அவசரத்தையும் உணர்ந்து துண்டு பிரசுரத்தை அச்சடித்து ஊழியர்கள் மத்தியில் கொண்டு செல்வதற்குண்டான நடவடிக்கையை எடுக்க கேட்டுக் கொள்கிறோம்.

தோழமையுள்ள
எஸ்.எஸ். சுப்பிரமணின்
பொதுச் செயலாளர்

***நோட்டீஸ் நகல்***

## மின் வாரியத்தில் பணியேற்க உள்ள கணக்கீட்டாளர்களே !

அன்பார்ந்த தோழர்களே,

தமிழ் நாடு மின் வாரியத்தில் கணக்கீட்டாளர் பணி நியமனத்தை எதிர்நோக்கி நேர்காணலில் பங்கேற்க வந்துள்ள அனைவரையும் தமிழ் நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பின் சார்பில் வாழ்த்தி வரவேற்கிறோம்.

தமிழ் நாடு மின் வாரியத்தை இந்திய அளவில் மிகச் சிறந்த பொதுதுறையாக நிடிப்பதிலும், அதன் கட்டமைப்புகளின் வளர்ச்சிக்காகவும் முனைப்போடு செயல்படுவதோடு அல்லாமல் அந்த பொது துறையில் பணியாற்றக்கூடிய உயர் அதிகாரிகள் முதல் கடைக்கோடி ஒப்பந்த தொழிலாளிகள் வரை அவர்களின் உரிமைகளை பாதுகாக்கவும், உழைப்பிற்கேற்ப பயன்களை பல்வேறு இயக்கங்களின் வாயிலாகபெற்றுத் தருகின்ற அமைப்பாகவும் செயல்படுகின்ற தொழிற்சங்கம்தான் தமிழ் நாடு மின் ஊழயர் மத்திய அமைப்பு.

தமிழ் நாடு மின் வாரியத்தின் வருவாய்க்கு முக்கிய காரணமாக விளங்குபவர்கள் கணக்கீட்டு பிரிவு ஊழியர்கள் ஆவார்கள். இந்த பிரிவில் சுமார் 15,000 ஊழியர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இந்த கணக்கீட்டு பிரிவில் அட்டைப் பட்டியல் (CARD BILLING ) முறையை 1980-ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு கணக்கெடுப்பவர், பட்டியல் தயார் செய்பவர், பட்டியல் விநியோகம் செய்பவர், பணவசூல் செய்பவர் என்று நான்கு பேர்கள் செய்து வந்த மின் கட்டண கணக்கெடுப்பு பணியினை ஒருவரே செய்யும் வகையில் அறிமுகப்படுத்தபட்ட இந்த ஆட்குறைப்பு திட்டத்தினை அப்போதே மத்திய அமைப்பு எதிர்த்தது. இருந்தபோதிலும் நிர்வாகத்திற்கு ஆதரவானவர்கள் இதனை ஆதரித்தனர்.

1985-ல் திருத்தப்பட்ட அட்டைப்பட்டியல் முறை, 1987-ம் ஆண்டு முதல் இரு மாதத்திற்கொருமுறை கணக்கெடுப்பு முறை அறிமுகம், தொடரந்து 2009-ம் ஆண்டு மாதம் முழுவதும் முப்பது நாள் கணக்கெடுப்பு முறை சென்னையில் துவக்கி தமிழகம் முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவை அனைத்திலும் மக்கள் சேவை என்பதைவிட ஆட்குறைப்பு நோக்கமே அதிகமாக இருந்ததால் தமிழ் நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு இத்திட்டங்களை எதிர்த்து வந்துள்ளது.

மேலும் தற்போது கணக்கீட்டாளர் மற்றும் கணக்கீட்டாளர-2 என இரண்டு வகையாக பிரிக்கப்பட்டு ஒரே விதமான பணியினை செய்பவர்களுக்கு இரண்டு விதமான ஊதிய முறையை வழங்கி ஊழியர்களின் உழைப்பை சுரண்டக்கூடிய பொதுத்துறையாக தமிழ் நாடு மின் வாரியம் உள்ளது. தமிழ் நாடு மின் வாரியத்தில் அனுமதிக்கப்பட்ட பதவிகளை ஆயிரக்கணக்கில் காலியாக வைத்துக்கொண்டு குறிப்பாக கணக்கீட்டு பிரிவில் நீண்ட பல ஆண்டுகளாக பணி நியமணம் செய்யாமலேயே, அப்பணிகளை ஒப்பந்த அடிப்படையிலும் அவுட்சோர்சிங் முறையிலும் செய்ய முயற்சி செய்கின்ற போதெல்லாம் வாரியத்திற்கு எதிராக வீதியிலும், நீதிமன்றத்திலும், சட்டமன்றத்திலும் தொடர்ந்து குரல் கொடுத்து பல்வேறு இயக்கங்களை நடத்தி இதுபோன்ற ஆட்குறைப்பு திட்டங்களை முறியடித்து இந்த கணக்கீட்டு பிரிவில் நேரடி பணி நியமணம் செய்ய வேண்டும் என்ற நெருக்கடியினை மின் வாரியத்திற்கு உருவாக்கியிருக்கின்றது தமிழ் நாடு மின் ஊழியர் மத்திய அமைப்புதான். அதன் விளைவாகத்தான் இன்று தங்களை போன்றவர்கள் மின் வாரியத்தில் கணக்கீட்டாளர் பணி நியமணத்திற்காக நேர்காணலுக்கு அழைக்கப்பட்டிருக்கின்றார்கள்.

இந்த நேர்காணலில் கலந்துகொள்ள வந்துள்ள அனைவரையும் மீண்டும ஒரு முறை வாழ்த்தி வரவேற்பதோடு, இதன் தொடர்ச்சியாக இந்த பணி நியமணம் என்பது தகுதி, திறமை அடிப்படையில் மட்டுமே அமைய வேண்டும் எனவும், இதில் எந்த வித முறைகேடும் ஏற்படா வண்ணமும் அரசியல் தலையீடு ஏதும் குறுக்கிடாதவாறு இருக்க வேண்டும் எனவும் தமிழ அரசையும், மின் வாரியத்தையும் தமிழ் நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு கேட்டுக்கொள்கிறது.

தமிழ் நாடு மின் வாரியத்தில் தொழிற்சங்க பணியில் மிக சிறப்பாக செயலாற்றும் மின் ஊழியர் மத்திய அமைப்பு தொழிலாளர் நலன்களை கருதி எதிர்காலத்தில் அரசின் புதிய பென்சன் திட்டம், மின் வாரியப் பிரிப்பு மற்றும் தனியார் மய தாராள கொள்கை போன்ற தொழிலாளர்களுக்கு எதிரான கொள்கைகளை பின்னுக்கு தள்ளும் உணர்வோடு பணியாற்றும் அந்த மகத்தான அமைப்பில் நீங்களும் இணைந்து பணியாற்ற வருக, வருக என வரவேற்கிறோம்.

தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

. . . . . . . . . . . . . . . . . **மின் வட்டக் கிளை**